**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 32/2022** |
| Deposition of witness | : | **PW-1** |
| Name | : | **ராதா** |
| Husband Name | : | **ஆறுமுகம்** |
| Age | : | **40** |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.03.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது வெள்ளையம்பதியில் வசித்து வருகிறேன். நான் டெய்லராக உள்ளேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். அவர்கள் எனக்கு பக்கத்து வீடுதான். சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாக, பிப்ரவரி மாதம் 25ஆம் தேதி, எனது இளைய மகள் மௌனியா பால் வாங்குவதற்காக சென்றபோது ஆஜர் எதிரிகளின் நாய் எனது மகளை துரத்தியது. மறுநாள் எனது கணவர் எதிரிகளின் வீட்டிற்கு சென்று நாயை கட்டி வைக்குமாறு சொன்னார்.

2. அதற்கு மறுநாள் எனது மூத்த மகள் ஹம்சிகா பால் வாங்க சென்ற போது அந்த நாய் அவரையும் துரத்தி முதுகில் கடித்து விட்டது. அவரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று ஊசி போட்டுவிட்டு வீட்டிற்கு அழைத்து வந்து விட்டோம். அன்றைய தினமே இரவு 8 மணி அளவில் எங்கள் வீட்டிற்கு வந்த ஆஜர் எதிரிகள் காம்பவுண்டுக்கு வெளியே நின்று கொண்டு தகாத வார்த்தைகளால் திட்டி மிரட்டினார்கள். இது சம்பந்தமாக குன்னத்தூர் காவல் நிலையத்திற்கு சென்று நான் புகார் கொடுத்தேன். எனக்கு புகார் எழுதத் தெரியாத காரணத்தினால் காவல்

நிலையத்திற்கு வந்திருந்த வேறு ஒரு நபரிடம் உதவி கேட்டு, நான் சொன்ன விபரங்கள் அடிப்படையில் புகார் எழுதிக் கொடுத்தார்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் புகாரில் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் **(புகார் அ. சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. 24.02.2022 அன்றுதான் சம்பவம் நடைபெற்றதா என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை. வழக்க சம்பவமானது ஒரே ஒரு நாள் தான் நடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயம் இரவு சுமார் 08.00 மணி இருக்கும். காலை வேளையில் எங்களுக்குள் ஒரு நாளும் பிரச்சனை ஏற்பட்டது இல்லை என்றால் சரிதான். நான் எனது மகளை மருத்துவ ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் சமர்ப்பித்தேன் என்றால் சரிதான். அதனை போலீசார் பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று இரவே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான்.

2. புகார் கொடுக்க என்னுடன் எனது கணவர், சதீஷ்குமார், தர்மராஜ் ஆகியோரும் உடன் வந்தார்கள் என்றால் சரிதான். அப்போதே எங்களை விசாரித்து போலீசார் உடன் வந்தவர்களிடமும் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுத்து போலீசார் என்னை விசாரித்த பின்பு, எனது வீட்டிற்கு போலீசார் வரவில்லை என்றால் சரிதான். புகார் போலீசார் சொல்ல சொல்ல தான் எழுதப்பட்டது

என்றால் நான் போலீசாருக்கு விவரம் சொன்னேன் பின்னர் போலீசார் சொன்னதன் பேரில் புகார் எழுதப்பட்டது.

3. இவ்வாறு தான் புகார் எழுத வேண்டும் என்று போலீசார் சொல்லி எழுதப்பட்ட புகாரில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகளின் நாய் எனது மகளை தடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் வசம் நாயே இல்லை என்றால் சரியல்ல. எனது மகளை கடித்த நாய் எதிரிகளின் நாய் தான் என்று என்னால் உறுதியாக சொல்ல இயலாது என்றால் சரிதான். எதிரிகள் வசம் நாய் உள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.03.05 13:42:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 32/2022** |
| Deposition of witness | : | **PW-2** |
| Name | : | **ஆறுமுகம்** |
| Father Name | : | **சந்திரசேகர்** |
| Age | : | **46** |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.03.2026.

முதல் விசாரணை

1. நான் தற்போது வெள்ளையம்பதியில் வசித்து வருகிறேன். நான் டெய்லராக உள்ளேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். அவர்கள் எனக்கு பக்கத்து வீடுதான். சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாக, பிப்ரவரி மாதம் 24ஆம் தேதி, மாலை 6 மணி அளவில் எனது இளைய மகள் மௌனியா பால் வாங்குவதற்காக சென்றபோது ஆஜர் எதிரிகளின் நாய் எனது மகளை துரத்தியது. அப்போது எதிரிகளின் வீட்டிற்கு சென்று நாயை கட்டி வைக்குமாறு சொன்னேன்.

2. அதற்கு மறுநாள் எனது மூத்த மகள் ஹம்சிகா மாலை வேளையில் பால் வாங்க சென்ற போது அந்த நாய் அவரையும் துரத்தி முதுகில் கடித்து விட்டது. அவரை தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று ஊசி போட்டுவிட்டு வீட்டிற்கு அழைத்து வந்து விட்டோம். அன்றைய இரவு வேலை சுமார் 8 மணி அளவில் , நான் எனது குடும்பத்துடன் வீழ்ந்த போது, ஆஜர் எதிரிகள் இருவரும் காம்பவுண்டுக்கு வெளியில் நின்று கொண்டு தகாத வார்த்தையால் திட்டி மிரட்டினார்கள்.

அதற்கு மறுநாள் 26 ஆம் தேதி குன்னத்தூர் அரசு மருத்துவமனைக்கு எனது மூத்த மகளை அழைத்துச் சென்று ஊசி போட்டுவிட்டு அன்றைய தினமே காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். எனது வீட்டில் எழுத தெரியாத காரணத்தினால், புகார் எழுத ஒரு காவலர் உதவி செய்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. பிப்ரவரி 26ஆம் தேதி தான் காலை வேளையில் குன்னத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். புகார் கொடுக்க எங்களுடன் சதீஷ்குமார் மற்றும் தர்மராஜன் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களையும் விசாரித்து போலீசார் காவல் நிலையத்திலேயே கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எங்களை விசாரித்த பின்பு போலீசார் மீண்டும் எங்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது மகளை கடித்த நாய் எதிரிகளின் வீட்டு நாய் தான் என்று என்னால் உறுதியாக சொல்ல இயலுமா என்றால் தெரியாது. போலீசார் கேட்டது என்று பெயரில் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.03.05 13:42:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.